# இலங்கையின் பொருளாதார வரலாறு

(கட்டுரைத்தொகுப்பு)



தொகுப்பாசிரியர்

**ந. பேரின்பநாதன்**

# இலங்கையின் பொருளாதார வரலாறு

## (கட்டுரைத் தொகுப்பு)

தொகுப்பாசிரியர்

**நல்லதம்பி பேரின்பநாதன்**
தலைவர்
பொருளியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

**வெளியீடு:**
**யாழ்ப்பாணப் பொருளியலாளர் சங்கம்**

**இலங்கையின் பொருளாதார வரலாறு**
**(கட்டுரைத் தொகுப்பு)**

| | | |
|---|---|---|
| தொகுப்பாசிரியர் | : | ந.பேரின்பநாதன் |
| முதல் பதிப்பு | : | 2013 யூலை |
| பக்கங்கள் | : | 343 + IX |
| பக்க அளவு | : | A5 (210mm x 148 mm) |
| அச்சுப்பதிப்பு | : | குடாநாட்டு பதிப்பகம்<br>34/2, இராமநாதன் வீதி,<br>திருநெல்வேலி, யாழ்ப்பாணம் |
| ஆக்கவுரிமை | : | ©2013 கட்டுரையாளர்களுக்குரியது |
| ISBN | : | 9789554445314 |
| வெளியீடு | : | யாழ்ப்பாணப் பொருளியலாளர் சங்கம் |
| விலை | : | ரூபா 500.00 |

**Economic History of Sri Lanka**
**Collection of Ariticles**

| | | |
|---|---|---|
| **Editor** | : | **N.Perinpanathan** |
| **First Edition** | : | **2013 July** |
| **Pages** | : | **343 + IX** |
| **Page Size** | : | **A5 (210mm x 148 mm)** |
| **Printers** | : | **Peninsula Printers,<br>34/2, Ramanathan Road, Thirunelvely,<br>Jaffna** |
| **Copyright** | : | **© 2013 by Writers of Articles** |
| **ISBN** | : | **9789554445314** |
| **Published** | : | **Jaffna Economists' Association** |
| **Price** | : | **Rs 500.00** |

# இலங்கையில் தொழிற்சங்க வளர்ச்சி 1948 வரை

எஸ். எஸ். உதயகுமார்

தொழிலாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் மேம்படுத்துதல் மற்றும் அவற்றைத் தொடர்ந்து பாதுகாத்தல், தொழிலாளர்களின் அறிவை மேம்படுத்தல், தொழிலாளர்களிடையே சுமுகமான உறவை ஏற்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல், தொழிலாளர்களின் சமூக கலாச்சார மற்றும் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல், தொழிலாளர்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காக காலத்துக்குக்காலம் சட்ட ஒழுங்கு விதிகளை உருவாக்க வழிசெய்தல், சமரசப் பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்க்க முடியாத பிணக்குகளுக்கு தொழிலாளர்களின் பலத்தை எடுத்துக்காட்டல் என்பவற்றினைக் கையாண்டு தொழிலாளர்களின் உரிமையினையும் நலன்களையும் வென்றெடுத்தல், போன்ற பலதரப்பட்ட செயற்பாடுகளினூடாகத் தொழிலாளர்களின் நலன்களையும் உரிமைகளையும் வென்றெடுப்பதற்காகவும் அவற்றைப் பாதுகாப்பதற்காகவும் தொழிலாளர்களால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பே தொழிற்சங்கமாகும். இத்தகைய தொழிற்சங்கங்கள் தமது நோக்த்தினை அடைவதற்கென ஒன்று சேர்ந்து உருவாக்கப் பட்டதே தொழிற்சங்க சம்மேளனமாகும். இந்த வகையில், தொழிற்சங்கத்தின் தோற்றம் பற்றிக் குறிப்பிடும் போது, "இலங்கையில் பெருந்தோட்டத்துறையில் தொழிற்சங்கத்தின் அறிமுகம் கடினமான ஒரு பணியாக – மகிழ்ச்சி அளிக்க

முடியாத ஒரு கருமமாக - இருந்தது. (சாரல் நாடன் 2008). இலங்கைப் பொருளாதாரத்தில் தொழிலாளர் வர்க்கம் என்பது முதலாளித்துவத்தின் தோற்றத்துடன் தான் ஆரம்பமாகின்றது. இலங்கையில் தொழிற்சங்கவாதம் அறிமுகம் தொடர்பான ஆரம்ப சிந்தனைகளை வெளியிட்ட நபராக *Alfred Earnest Baultjens* (1865-1916) விளங்கினார். இந்த அடிப்படையில் நோக்கும் போது, இலங்கையில் 1893 இல் அமைக்கப்பட்ட 'இலங்கை அச்சுத்தொழிலாளர் சங்கம்' என்பதுதான் தென்கிழக்காசியாவிலேயே முதன் முதலாக அமைக்கப்பட்ட தொழிற்சங்கமாகச் சரித்திர முக்கியத்துவம் பெறுகிறது. *(C.V.Velupillai, 1981 : P : i)* இங்கு தொழிலாள வர்க்கம் என்று கூறுகின்ற போது (தங்களின் உழைப்பு சக்தியைக் கூலிக்கு விற்று தொழிற்சாலைகளில் வேலை செய்வோரையோ அல்லது ஒழுங்குபடுத்தப்பட்ட குழுவினரையோ தான் கருதப்படுகிறது) வேலை நேரத்திற்குப் பின்பு முதலாளிக்குத் தொழிலாளி மீது எவ்வித உரிமையும் இல்லை. அதன் பின்பு இவன் சுதந்திரமான தொழிலாளி ஆகின்றான். இவ்வித சுதந்திரம் இவனுக்கு அவசியமானதாகும். இதன் மூலமாகவே அவன் கூடிய சம்பளத்தையும், சிறந்த வாழ்க்கையையும் பெற்றுக் கொள்ளக் கூடிய ஓர் அணியில் திரண்டு தொழிற் சங்கம் ஒன்றினை அமைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட முடிகிறது. இங்கு தொழிற்சங்கம் என்பது தொழிலாளர்கள் பணிபுரிகின்ற துறையினை அடிப்படையாகக் கொண்டு தனியார் துறை சார்ந்த தொழிற்சங்கம். பொதுத்துறை சார்ந்த தொழிற்சங்கம் மற்றும் கூட்டுறவுத் துறை சார்ந்த தொழிற்சங்கம் என வகைப்படுத்தலாம்.

இலங்கையில் பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில், பெருந்தோட்டத்தின் ஆரம்பத்துடனேயே முதலாளித்துவம் என்பது வேரூன்றத் தொடங்கியது. 1815 இல் கண்டி இராச்சியம் கைப்பற்றப்பட்ட போதிலும் கோப்பிச் செய்கை 1830 களில் (குறிப்பாக 1828 இல்) இங்கு ஆரம்பிக்கப்பட்ட போது போதியளவு தொழிலாளர்கள் உள்ளூரில் கிடைக்காமல் தோட்டத் துரைமார்கள் தென்னிந்தியாவிலிருந்து தொழிலாளரைத்

தருவித்தனர். இக்காலகட்டத்தில் குறிப்பாக 1820 களிலேயே தென்னிந்தியாவிலிருந்து இந்தியத் தொழிலாளர்கள் இலங்கைக்குள் குடிபெயர ஆரம்பித்து விட்டார்களாயினும் அவர்கள் மத்தியில் தொழிற்சங்க இயக்கம் வேரூன்றுவதற்கு 100 ஆண்டு காலம் பிடித்திருக்கிறது. *(C.V.Velupillai, 1981 : P : i)* அமெரிக்காவின் கறுப்பு நிற அடிமைகளுக்கு நிகராக பிரிட்டிஸாரின் ஏகாதிபத்திய ஆட்சியில் மிகவும் குரூரமான சுரண்டல்களுக்காளான மலையகத் தொழிலாளர்கள் மத்தியில் நூாறு ஆண்டு காலமாகத் தொழிற்சங்க இயக்கம் வேரூன்றாமைக்குரிய காரணங்கள் இக்கட்டுரையின் பிற்பகுதியில் ஆராயப்பட்டுள்ளது. இலங்கையில் முதலாளித்துவ உற்பத்தி முறையானது பெருந்தோட்டத்துறைக்கு ஊடாகத்தான் ஊடுருவியதாக இருப்பினும் தொழிலாளர்களுக்கும் பெருந்தோட்ட முதலாளிகளுக்கும் இடையிலான உறவு முறைகளில் நிலமானிய அம்சங்களும் சுவறியிருந்தமை இந்த நிலைமைக்குரிய முக்கிய காரணியாகும். (C.V.Velupillai, 1981:P:i,ii ) இலங்கைப் பொருளாதாரத்தில் தொழிற்சங்கங்களின் தோற்றம் மற்றும் அவற்றின் செயற்பாடு என்பன பாரிய ஒரு பிரச்சினையாகவும் சிலவேளைகளில் போராட்டங்களில் ஈடுபட்டே தொழிற்சங்கங்களை அமைக்க வேண்டிய ஒரு சூழ்நிலையும் காணப்பட்டது. (C.V.Velupillai, 1981: P: iii)

தென்னிந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட தொழிலாளர்கள் கங்காணிமாரிலேயே பெருமளவுக்கு தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. தொழிலாளர்களு க்குச் சிறந்தது எது என்பதைத் தாமே நிர்ணயிக்கலாமென முதலாளிகள் எண்ணிய காலம் இதுவாகும். உண்மையில் தொழிலாளர்கள் கங்காணிமார்களின் அடிமைகளாக ஸ்தாபன ரீதியில் ஒற்றுமைப்படுத்தப்படாத நிலையில் இருந்தனர். இதனால் அவர்களால் தொழிற்சங்கங்களை அமைக்கமுடிய வில்லை. குமாஸ்தாக்களும் ஏனைய அதிகாரிகளும் கூட தொழிற்சங்கம் அமைப்பதில் நாட்டம் கொள்ளவில்லை. அவர்கள் பரஸ்பர சலுகைச் சங்கங்களை மாத்திரம் தோற்றுவித்தமை

குறிப்பிடத்தக்கது. இவற்றுள் பொதுச்சேவை சேமலாப நிதிக்கழகம் குறிப்பிடத்தக்கதாகும்.

சட்ட சபைக்கு முறைப்பாடு மனுக்களைச் சமர்ப்பித்தல் மூலம் தொழிலாளர்களின் குறைகளைச் சுட்டிக் காட்டுவது அக்காலத்தில் வழக்கமாக இருந்தது. இம்முறை அப்போதைய அரசின் கவனத்தை ஈர்க்கவில்லை. எனவே தொழிலாளர்களின் குறைகளைத் தீர்க்கவும், அவர்களுக்கு நியாயமான ஊதியத்தையும் அவர்கள் வேலை செய்யும் இடங்களையும், சீர்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பல தேசியத் தலைவர்கள் தன்னியல்பான தொழிற்சங்கங்களைத் தோற்று விக்க முன்வந்தனர். அவர்களுள் A.E.Baultjens என்பவர் குறிப்பிடத்தக்கவராவர். இவர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்றவர். இவர் அக்காலத்தில் ஆனந்தாக் கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றினார். இவர் Independent Catholic என்ற சஞ்சிகையில் இலங்கையில் தொழிற் சங்கங்களுக்கான தேவை என்ற கட்டுரையை எழுதி வெளியிட்டார். அவர் இலங்கையில் தொழிற் சங்கங்கள் உருவாகுவதன் அவசியத்தையும், விசேடமாக அச்சுக் கூடத் தொழிலாளர்கள் ஒன்று சேர்ந்து தொழிற்சங்கம் ஒன்றை நிறுவும் யோசனையையும் வலியுறுத்தியிருந்தார். அவரது நம்பிக்கை விரைவில் செயற்படத்தொடங்கியிருந்தது.

தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பாக நோக்கும் போது, 1893 செப்ரெம்பர் 12 ஆந் திகதி தொடக்கம் 18 ஆந் திகதி வரை H.W.Cave & Co. வினைச் சார்ந்த அச்சுத் தொழிலாளர்கள் சங்கம் ஒன்று தமது சம்பளத்தில் ஏற்பட்ட தாமதத்தை எதிர்த்து வேலை நிறுத்தம் ஒன்றில் இறங்கியது. இவ்வேலை நிறுத்தமானது 1893 ஆம் ஆண்டில் இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் என்ற அமைப்புத் தோற்றம் பெறக் காரணமாயிற்று. இதன் தலைவராக ஐனெறிநனெநவெ ஊயவாழடைஉ என்ற பத்திரிகை வெளியிடுபவரான *Dr.Lishao Pinto* என்பவரும் காரியதரிசியாக *A.E.Baultjens* என்பவரும்

தெரிவு செய்யப்பட்டனர். இந்தச்சங்கம் அமைக்கப்பட்டவுடன் வேலை நிறுத்தமும் தோல்வி அடைந்தது. வேலை நிறுத்தத்தை நடாத்திய தலைவர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். எனினும் சங்க அமைப்பு என்ற நோக்கில் செய்யப்பட்ட இவர்களது முயற்சியானது வெற்றி கண்டதெனலாம்.

1906 ஆம் ஆண்டில் கொழும்பு நகரில் இருந்த வண்டிற்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் வெற்றி பெற்றது. தொடர்ந்து இவ்வேலை நிறுத்தமானது, கொடுத்த வெற்றி காரணமாக, 1906 ஆம் ஆண்டில் வண்டிற்காரர் சங்கம் அமைக்கப்பட்டது. இந்த வேலை நிறுத்தத்தின் முக்கியத்துவம் யாதெனில் நகரிலுள்ள ஒழுங்கு படுத்தப்படாத தொழிலாளர்கள் தமது குறைபாடுகளை எடுத்துக் கூறுவதற்காக சங்கங்கள் அமைக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தமையாகும். பெருந்தோட்டத் துறைகளின் வளர்ச்சி காரணமாகக் கொழும்பு நகரம் வர்த்தக மையமாக வளர்ச்சி அடைந்திருந்தது. இதனால் நகரப் புறத் தொழிலாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவிற்கு வளர்ந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. நிர்வாகத்தினை ஏற்றுக் கொண்டு நடாத்தவும் ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கும் அரசாங்கத் துறையிலும், தனியார் துறையிலும் பெருமளவு எழுதுவினைஞர்கள் தேவைப்பட்டனர். இந்த நிலையில் நோக்கும் போது, 1911 இல் அரசாங்கத்துறையில் 5400 எழுதுவினைஞர்கள் வேலை பார்த்தனர். 1911 இல் சிங்களவரும், தமிழரும், மலையாளிகளுமாக 75,000 நகரப்புறத் தொழிலாளர்கள் காணப்பட்டனர். இவர்களில் பயிற்சி எதுவுமே இல்லாத தொழிலாளர்களும், வீட்டு வேலைக்காரர்களும் அடங்குவர். இவர்களோடு 2000 பாதைத் தொழிலாளர்கள், 9500 இரயில்வே தொழிலாளர்கள், 2800 தச்சர்கள், 2300 கொல்லர்கள், 1800 மேசன்மார்கள், 950 அச்சுக் கோப்பாளர்கள், 648 பொற்கொல்லர்கள் 180 ராம்வே (*Tramway*) தொழிலாளர்கள் போன்ற பலதரப்பட்ட தொழிலாளர்களும் உள்டங்குவர்.

1912 ஆம் ஆண்டு புகையிரதத் தொழிலாளர்கள் கடந்த இருபது வருடங்களாக 33% வாழ்க்கைச் செலவு அதிகரித்திருந்தும் சம்பளங்கள் அதிகரிக்கவில்லை என்றும் இதனால் சம்பள அதிகரிப்பு, மற்றும் சுகவீன லீவு, 5 வருட சேவையின் பின்பு முழுச்சம்பளம், 20 வருட சேவையின் பின்பு திரட்டுச் சம்பளம் வழங்குதல் போன்ற கோரிக்கைகளை அடிப்படையாக வைத்து வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வாறு வேலை நிறுத்தம் செய்த போது புகையிரதத் தொழிலாளர்கள் சங்கம் அமைத்திருக்கவில்லை. ஆனால் அவ்வேலை நிறுத்தத்தோடு தொழிலாளர்களின் குறைகள் அவர்களது துன்பங்கள் என்பவற்றை ஆராய்வதற்காக முடிக்குரிய ஆணைக்குழு ஒன்றை அரசாங்கம் நியமித்தது. அத்தோடு வேலை நிறுத்தமானது தொழிலாளர்கள் சேமலாபநிதி சங்கத்தினை அமைப்பதற்குக் காரணமாக அமைந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

1919 ஆம் ஆண்டு இலங்கைத் தொழிற்சங்க வளர்ச்சிக்கு ஓர் அடிப்படை ஆண்டாக அமைந்தது. இவ்வருடத்தில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் அமைக்கப்பட்ட போது மத்திய வகுப்பினர் தொழிலாளர்களின் நிலைமைகளைச் சீர்தூக்குவதற்கு முன் வந்தனர். ஆரம்பத்தில் மத்திய வகுப்பில் காணப்பட்ட தலைவர்களில் சிலர் தொழிலாளர் வகுப்பில் அக்கறை காட்டிய போதும் அவர்கள் தொழிலாளர் வகுப்பினரின் நலன்களைப் பாதுகாக்கும் நோக்குடன் சில அமைப்புக்களை ஏற்படுத்துவதில் போதிய கவனம் செலுத்தியிருக்கவில்லை. இதனை நீக்கும் நோக்குடன் இக்கால அரசியல் வாதிகளுள் முக்கியமானவராக விளங்கிய சேர் பொன். அருணாசலம் என்பவரால் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 1919 இல் இதன் உச்ச நிலையாக இலங்கைத் தொழிலாளர்கள் நலன் புரிச் சங்கத்தின் ஸ்தாபிதம் அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

இச்சங்கம் பின்வரும் விடயங்களை அடக்கிய வகையில் தேசிய காங்கிரஸானது தீர்மானம் எடுக்கச் செய்வதில் இதே

வருடத்தில் வெற்றி கண்டது. இத்தீர்மானத்தில் பின்வரும் அம்சங்கள் முக்கியம் பெற்றன.

- உழைப்பு என்பது ஒரு வகை சமூக சேவை என்பதையும் தொழிலாளர் நலன் என்பது பொருள் ரீதியான உற்பத்தியிலும் பார்க்க முக்கியமானது என்பதனையும் அங்கீகரிக்காத தொழிற்சட்டங்கள் யாவையும் நீக்கப்படுதல் வேண்டும்.

- வேலைக்குரிய உடன்படிக்கைகளைத் தொழிலாளர் கள் மீறும் போது விதிக்கப்பட்டு வரும் தண்டனைகளையும் நீக்குதல் வேண்டும்.

- குறைந்தபட்ச சம்பளம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

- வேலை நேரமும் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும்.

- தொழிலாளர்கள் ஒன்று கூடுவதற்கான உரிமை வழங்கப்படுதல் வேண்டும்.

- நல்லிட வசதி அளிக்கப்படுதல் வேண்டும்.

- பேறுகால சலுகைகள் வழங்கப்படுதல் வேண்டும். என்பவை முக்கியமானவையாக இருந்தன.

இக்காலத்தில் இலங்கை சமூக சேவைகள் சங்கம் மற்றும் சேர் பொன்.அருணாசலம், டி.பி.ஜெயதிலக போன்றோருடன் தொடர்புடைய வகையில் இலங்கைத் தொழிலாளர் சம்மேளனம் என்பன ஸ்தாபிக்கப்பட்டன. மேற்கூறிய கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நோக்கில் இச்சம்மேளனம் அதன் பிரதான நடவடிக்கையாக புகையிரதப் பகுதியிலும், துறைமுகத்திலும் ஒரு வேலை நிறுத்தத்தை மேற்கொண்டது. எனினும் அதன் நடவடிக்கைகள் முன்னேற்றகரமானவையாக அமையவில்லை. இவை தொழிலாளர் சங்கங்கள் என்று கூறுவதை விட தொழிலாளர்

நலனில் அக்கறைகொண்ட மத்திய வகுப்பினரால் மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளையே காட்டுகின்றன. எனினும் தொழிலாளர் வகுப்பினரின் ஆங்கில அறிவுப் பற்றாக்குறை, கலாசார ரீதியாகப் பின் தங்கிய நிலை போன்ற காரணங்களால் சுதந்திரமான தொழிலாளர்களிடையே ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் ஓர் அமைப்பு ஏற்படுவதற்குத் தலைமை என்பது மத்திய வகுப்பினரில் இருந்தே தோன்ற வேண்டியிருந்தது என்பதையும் இங்கு குறிப்பிடுதல் வேண்டும்.

இலங்கையில் தொழிற்சங்கம் என்பது 1922 இல் ஏ.ஈ.குணசிங்க என்பவரால் 10.10.1922 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் சங்கம் *Ceylon Labour Union* என்பதுடன் தான் ஆரம்பமாகியது எனலாம். பல நடவடிக்கைகளின் மையமாக இருந்த கொழும்பு நகரில்தான் இக்காலத்தில் தொழிற்சங்கம் வளர்ச்சி பெற்றது. இக்காலப் பகுதியில் சட்ட சபை அங்கத்தவராகக் கடமையாற்றிய நடேசைய்யர் இந்திய வம்சா வழித் தொழிலாளரை ஒரு அமைப்புக்குள் கொண்டு வர முயற்சி செய்தார். இவர் அகில இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் சம்மேளனம், இலங்கை இந்திய சம்மேளனம் என்ற இரு சம்மேளனங்களை இக்காலப் பகுதியில் அமைத்தார். இங்கு அகில இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் சம்மேளனமானது தோட்டத்துறை சார்ந்த தொழிலாளர்களை ஒன்றிணைப்பதாகவும் இலங்கை இந்திய சம்மேளனமானது பெருந்தோட்டத்துறைக்கு அப்பாற்பட்ட தொழிலாளர்களை ஒன்றிணைப்பதாகவும் காணப்பட்டது. நடேசைய்யர் ஆரம்பத்தில் ஏ. ஈ குணசிங்காவுடன் ஒத்துழைத்து தொழிற் சங்கம் வளர்ச்சி பெற உதவிய நிலை காணப்பட்டது. ஆனால் பின்னர் 1928 இல் குணசிங்காவின் இந்திய எதிர்ப்புக் காரணமாக நடேசைய்யர் அவரை விட்டு வெளியேறினார்.

1922 இல் ஆரம்பிக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் சங்கம் தனியே தொழிலாளர் பற்றிய விடயங்களில்

மட்டுமல்லாது அரசியல் கலப்பு உடையதாகவும் எற்பட்டது. இச்சங்கத்துடன் திருவாளர் விக்டர் கொறியா திருவாளர் சி. எச். சற் பெர்னான்டோ, திரு. எச். டபிள்யு தகநாயக்கா போன்றோர் தொடர்புபட்டிருந்த போதிலும் ஏ.ஈ.குணசிங்க என்பவரே விரைவில் கொழும்பில் தொழிலாளர்களின் தலைவராக மாறினார். இச்சங்கமானது உயர்ந்த சம்பளம் பெறுவதற்காகவும் வேலைத் தளங்களில் தொழிலாளர்களின் வசதியை அதிகரிப்பதற்காகவும் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் ஆரம்பம் தொட்டே போராட்டத் தன்மை கொண்டனவாக இருந்தன.

இச்சங்கம் 11.02.1923 இல் இரயில்வே தொழிலாளர்களிடையே தனது முதலாவது வேலை நிறுத்தத்தினை ஆரம்பித்தது. இந்த வேலை நிறுத்தம் மார்ச் மாத இறுதிவரையில் நடைபெற்றது. இவ்வேலை நிறுத்தம் தனியே புகையிரதத் தொழிலாளரோடு மாத்திரமல்ல கொழும்புத் துறைமுகமும், வெள்ளவத்தை துணியாலைகள், மற்றும் பல வர்த்தக நிலையங்கள் என்பவற்றுடன் மாத்திரமல்லாமல் மலசலகூட சுத்திகரிப்புத் தொழிலாளரிடையேயும் பரவியிருந்தது. இதில் 15,000 த்திற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பங்கு பற்றியிருந்தனர். இதன் காரணமாக இச்சங்கத்தின் கிளைகள் பதுளை, நீர்கொழும்பு, நாவலப்பிட்டி ஆகிய இடங்களிலும் நிறுவப்பட்டன. இச்சங்கம் பெற்ற வெற்றி ஏனைய தொழிற்சங்கங்கள் உருவாகவும், முன்னர் உருவாகி ஒழுங்காக இயங்காமல் இருந்த தொழிற்சங்கங்கள் திரும்பவும் புதுப்பிக்கப்படவும் வழிவகுத்தது. இலங்கைக் கடற் தொழிலாளர் சங்கம், இலங்கை மோட்டார் ஓட்டிகள் சங்கம், இலங்கை அச்சுத் தொழிலாளர் சங்கம் போன்றவை திரும்பவும் 1923 இல் இயங்கத் தொடங்கின. 1923 ஆம் ஆண்டு நடந்த வேலை நிறுத்தம் தொழிலாளர்களுக்கு எவ்வித நன்மையையும் உடனடியாக கொடுக்கா விடினும் 1925 இல் கூலியில் ஏற்பட்ட 20% உயர்விற்கும் அவ்வாண்டில் நடந்த சமரசப் பேச்சு வார்த்தைகளுக்கும் வழிவகுத்தது எனலாம்.

இதனைத் தொடர்ந்து 1926, மற்றும் 1927 ஆம் ஆண்டுகளில் பல வேலை நிறுத்தங்கள் நடந்தன. 1926 ஓகஸ்ட் 1 ஆம் திகதி இரு தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக வெள்ளவத்தை ஆலைத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். இது ஏறக்குறைய 2 மாதங்கள் வரை நீடித்தது. 1927 பெப்ரவரி 29 இல் குறைந்த கூலிக்கு எதிராகக் கடற்தொழிலாளர்கள் இரு நாள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனைத் தொடர்ந்து துறைமுகத்தில் பொருட்களை ஏற்றுதல், இறக்குதல் போன்றவற்றில் ஈடுபட்டிருந்தவர்களும் வேலை நிறுத்தத்தில் இறங்கினர். பொருட்களை ஏற்றுபவர்கள் நாளொன்றிற்கு ரூபா 1.50 உம் இறக்குபவர்கள் நாளொன்றிற்கு ரூபா 1.30 உம் சம்பளமாகப் பெற்று வந்தனர். வேலை நிறுத்தத்தின் போது (ஏறக்குறைய 4000 - 5000 இற்கு இடைப்பட்ட தொழிலாளர்கள்) பகல் வேலைக்கு ரூபா 2.00 உம், இரவு வேலைக்கு ரூபா 3.00 உம் கேட்டனர். அத்துடன் சாப்பாட்டிற்காக ஒரு மணித்தியாலம் லீவும் கேட்டனர். இவர்களுடன் வள்ளங்களிலிருந்து பொருட்களை இறக்கி களஞ்சிய அறைக்குக் கொண்டு செல்பவர்கள் (2000 பேர்) பொருட்களை வண்டிகளில், லொறிகளில் ஏற்றுபவர்கள் (400 பேர்) போன்றோரும் சேர்ந்து கொண்டனர். இது துறைமுகத்தில் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியது. இதனால் அரசாங்கம் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்ட தொழிலாளர்களையும் குற்றவாளிகளையும் கொண்டு துறைமுக வேலைகளைச் செய்ய முனைந்தது. எனினும் குற்றவாளிகள் திறமையற்றவர்களாக இருந்தனர். இந்தியத் தொழிலாளர்களுக்கு வேலைநிறுத்த்திற்கு சார்பான கடைகளில் சாப்பாடு வழங்க மறுக்கப்பட்டதால் அவர்கள் தொகையும் குறைந்தமையும் குறிப்பிடத்தக்கது.

இவ்வேலை நிறுத்தத்தை நடாத்தியதும், மேற்பார்வை செய்ததும், இலங்கைத் தொழிலாளர் சங்கமேயாகும். பணம், சாப்பாடு என்பன வசூலித்ததுடன் வேலை நிறுத்தம் செய்தோருக்கும் அவற்றை வழங்கியது. வேலை நிறுத்தம்

2 அல்லது 3 மாதங்கள் நடந்தாலும் சலிக்காது தொடர வேண்டுமெனக் கூட்டங்களில் ஏ. ஈ குணசிங்க கூறினார். நாட்டின் பொருளாதார வாழ்வுக்குத் துறைமுக வேலைகள் நடப்பது அத்தியாவசியம் ஆகையால் 3 கிழமைகளின் பின்னர் சம்பள உயர்வு வழங்க அரசாங்கம் முன் வந்தது. பொருள் ஏற்றுபவருக்கு நாட்கூலி ரூபா 1.75 உம், இறக்குவோருக்கு நாட்கூலி ரூபா 1.60 உம். இரவுக் கூலி ரூபா 3.20 உம். அத்துடன் சாப்பாட்டுக்கான இடைவெளியாக பகலில் ¾ மணித்தியாலமும், இரவில் 1 மணித்தியாலமும் வழங்கப்பட்டது. ஏ.ஈ.குணசிங்காவின் வெற்றிகளில் இது மிகவும் குறிப்பிடத்தக்க தாகும். வேலை நிறுத்தக்காரர்கள் ஆலைத் தொழிலாளர்கள், பொது மக்கள் ஆகியோரிடமிருந்து. கணிசமான அளவு ஆதரவு இருப்பதால் எல்லா இடங்களிலும் கூட்டம் வைத்து (புகையிரத, துறைமுக, அரசாங்க) போராட்டத் தன்மை வாய்ந்த பிரச்சாரங்களைச் செய்யக் கூடியதாக இருந்தது. பல கடைக்காரர்கள் வேலை நிறுத்தக்காரர்களுக்குச் சாப்பாடு வழங்கினர். அதன் பின்னர் ஏ.ஈ.குணசிங்க தொழிலாளர்களின் ஒப்பற்ற தலைவராக மாறினார்.

பல வெற்றிகளைக் கண்ட இலங்கைத் தொழிலாளர் சங்கம் *Kamkaru Handa* என்ற பத்திரிகை ஒன்றையும் சிங்களத்தில் வெளியிட்டது. 1928 ஆம் ஆண்டானது இலங்கையின் தொழிற்சங்க வரலாற்றில் முக்கியமான ஆண்டாகும். இவ்வாண்டு ஒகஸ்ட் மாதத்தில் தான் *All Ceylon Trade Union Congress* மாத்திரமல்லாமல் அரசியல் விடயத்தில் அவ்வாண்டு ஒக்டோபர் மாதத்தில் இலங்கைத் தொழிலாளர் கட்சி (*Ceylon Labour Prtry*) ஆரம்பிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இக்கால கட்டத்தில் இலங்கைத் தொழிலாளர் சங்கம் தனது தொடர்புகளைச் சர்வதேச ரீதியிலும் ஏற்படுத்தத் தொடங்கியது. 1928 யூன் மாதத்தில் லண்டனில் நடைபெற்ற *Imperial Labour Conference* க்கு ஏ.ஈ.குணசிங்க சென்றிருந்தார். அங்கிருந்து அவர் திரும்பியதும் அகில இலங்கைத் தொழிலாளர்

காங்கிரசின் கூட்ட அமைப்பு நடைபெற்றது. நாட்டின் பல பாகங்களிலும் உள்ள தொழிற்சங்கங்கள் இதில் கலந்து கொண்டன. 40,000 தொழிலாளர்களை இது பிரதிநிதிப் படுத்துவதாக குணசிங்க குறிப்பிட்டடிருந்தார். காங்கிரஸில் 22 ஸ்தாபனங்கள் பிரதிநிதித்துவம் பெற்றிருப்பதாகக் கூறப்படினும் அவை யாவும் ஒழுங்காக அமைந்த ஸ்தாபனங்கள் என்று கூற முடியாது. எனினும் தொழிலாளர் வர்க்கத்தில் முதல் முதலில் பெருந்தொகையாக ஒன்று சேர்ந்து தமது நலனை முன்னேற்ற முற்பட்டனர் என்ற வகையில் இது முக்கியத்துவம் பெறுகின்றது. இச்சம்மேளனம் தான் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கை களைத் தனது கோரிக்கைகளாக ஆரம்பத்தில் விடலாயிற்று. தொழிற்சங்கங்களை சட்டபூர்வமாக ஏற்றுக் கொள்ளுதல், ஆகக்குறைந்த ஊதியம், நடுத்தீர்வு மன்றங்கள் மற்றும் பேறுகால சலுகைகள் போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இக்கால அரசியலை நோக்கும் போது தொழில் கட்சி ஆரம்பித்தமையும் முக்கியத்துவம் பெற்றதாக உள்ளது. இலங்கைத் தொழிலாளர் சங்கம் 1922 இல் ஆரம்பித்தது தொடக்கம் இலங்கைத் தேசிய காங்கிரசுடன் இணைந்தே செயற்பட்டு வந்தது. 1927 இல் 5 ஆவது பொதுக் கூட்டம் நடந்தபோது வயது வந்தோருக்கான வாக்குரிமை டொனமூர் குழுவிடம் கேட்பதாக முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இலங்கைத் தேசிய காங்கிரசில் இருந்த ஜயதிலக்க, டி.எஸ்.சேனநாயக்கா போன்றோர் சர்வஜன வாக்குரிமை கொடுப்பதை எதிர்த்தனர். இதனால் 1929 ஒக்டோபரில் இலங்கைத் தொழிற்கட்சியும் இலங்கைத் தொழிலாளர் சங்கமும், இலங்கைத் தேசிய காங்கிரஸில் இருந்து விலகிக்கொண்டன.

1928 இற்குப் பின்னர் ஏற்பட்ட உலகப் பெரு மந்தமானது இலங்கையையும் பாதித்தது. பொருளாதார தேக்கமானது 1928, 1929 இல் மேலும் மேலும் ஆழமாகச் சென்ற போது இக்கால கட்டத்தில் பெரும் வேலை நிறுத்தங்கள் ஏற்பட்டன. 1929 இல் ஆம்ஸ் ரோங் கராஜ்ஜில் வேலை செய்த மோட்டார் ஓட்டிகளும்

யூலையில் *Colombo Commercial Company* யில் வேலை நிறுத்தம் நடந்தது. டிசம்பரில் *Grand Oriental Hotel, Queens Hotel* மற்றும் *Printing Workers of the Colombo Apothecaries* லும் வேலை நிறுத்தம் நடந்தது. 1929 ஆம் ஆண்டில் முதல் மூன்று மாதத்திற்குள் *Galle Face Hotel, Walker and Greigs Saw Mills*, 'டைமஸ்' நிறுவனத்தின் அச்சுக் கூடப்பகுதி, *Lake House, Cave and Co.*, ஆகியவற்றிலும் வேலை நிறுத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இவ்வேலை நிறுத்தங்கள் எல்லாவற்றையும் விட 1929 இல் பெப்ரவரியில் நடைபெற்ற மின்னூர்தி பாதை *(Dram way)* வேலை நிறுத்தம் முக்கியமானதாகும். இந்த வேலை நிறுத்தங்கள் யாவும் ஏ.ஈ.குணசிங்காவின் அகில இலங்கை தொழிலாளர் சம்மேள னத்தின் கீழ் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. மின்னூர்தி வேலை நிறுத்தத்தின் போது தொழிலாளரால் மருதானையில் இருந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு எரிக்கப்பட்டது.

1929 இல் நடைபெற்ற ஒரு முக்கிய விடயம் யாதெனில் ஏ.ஈ.குணசிங்காவின் அகில இலங்கை தொழிலாளர் பேரவை, தொழில் கொள்வோர் சம்மேளனத்துடன் தொழிலாளர்களின் குறைகளைத் தீர்த்து வைக்கும் முகமாக ஒரு ஒரு உடன்படிக்கை ஏற்படுத்தப்பட்டது. இதன்படி வேலை நிறுத்தம் செய்யும் முன்னர் 7 நாட்களுக்கு முன்னறிவித்தல் கொடுப்பதற்குச் சங்கம் சம்மதித்தது. இதுவே தொழிற் சங்கத்திற்கும், தொழில் கொள்வோர் சம்மேளனத்திற்கும் இடையே நடைபெற்ற ஒரு கூட்டு ஒப்பந்தமாகும். இது குணசிங்காவின் திறமையான தலைமைத்துவத்தின் கீழ் 7 வருடங்களைக் கொண்ட ஒரு சிறிய காலப் பகுதியில் தொழிற்சங்கங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அவற்றின் விளைவுகளும் அதன் காரணமாக அது எவ்வாறு பலமுள்ள இயக்கமாக வளர்ச்சி அடைந்தது என்பதையும் தொழில் கொள்வோரிடமிருந்து மதிப்பையும் அங்கீகாரத்தையும் பெற்று வெற்றி கண்டது என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது. இக்காலத்தில் குணசிங்காவினதும் அவரது தொழிற் சங்கத்தினதும். தொழில் சங்க நடவடிகசை களில் மாற்றம் ஏற்பட்டு வந்தது. 1931 இல் தொழிலாளர்

வாக்குரிமை பெற்றமை அவர்களது முக்கியத்துவத்தை அதிகரித்தது. இக்காலத்தில் குணசிங்கா காந்திய வழிகளினால் படிப்படியாகக் கவரப்பட்டார். அத்துடன் அவரது அனுபவ முதிர்வும் சேர்ந்து போராட்டத்தன்மையான நடவடிக்கைகளை குறைத்து தொழிலாளர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சாதாரண வழிகளை நாடினார்.

இத்தகைய மாற்றத்தினை 1931 இல் *The Times of Ceylon* நிறுவனத்தின் வேலை நிறுத்தத்தின் போது காண முடிந்தது. இவ்வேலை நிறுத்தம் 3 மாத காலம் நீடித்ததுடன் நகர மக்களின் கவனத்தினையும் ஈர்த்திருந்தது. இந்த நிலையில் தொழிலாளர்களது நலன்களுக்கு மாறாக கருங்காலிகள் நிர்வாகத்திற்கு உதவி செய்வதைத் தடுப்பதற்காக குணசிங்கா சாகும் வரை உண்ணாவிரதத்தை 1931 ஏப்ரல் 10 இல் ஆரம்பித்தார். 5 நாட்களுக்குள் தனது நோக்கத்தினை அவர் அடைந்ததால் உண்ணாவிரதத்தினை முடிவிற்குக் கொண்டு வந்தார். இந்த வேலை நிறுத்தத்தின் விளைவாகத் தொழில் பிணக்குகள் உத்தரவுச் சட்டம் 1931 இல் பிறப்பிக்கப்பட்டது. இந்த உத்தரவுச் சட்டம் தொழில் பிணக்குகள் இயக்கத்தினாலும், நடுத்தீர்வு மன்றங்களினாலும் தீர்த்து வைக்க வழி வகுத்தது. 1931 இல் கொண்டவரப்பட்ட சர்வஜன வாக்குரிமையின் விளைவாக இதுவரை காலமும் உதாசீனம் செய்யப்பட்ட தொழிலாளர்கள் முக்கியமானவர்களாகக் கணிக்கப்பட்டனர். தொழிலாளர்கள் வாக்காளர்களான காரணத்தினால் அரசியல் வாதிகள் அவர்களுடைய நலன்களையும் கவனிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது, இதனால் தொழிற் சங்க நடவடிக்கைகளில் அரசியல் கலப்பு ஏற்பட வழி பிறந்தது.

ஏ.ஈ.குணசிங்க முதிர்ச்சி அடைந்து மென்மையான வழிகளைக் கையாள முனையும் போது தொழிற்சங்க விடயத்தில் போராட்டத் தன்மை கொண்ட புதியவர்கள் தோன்றினர். அவர்கள் இளையவர்களாக இருந்ததுடன் தமது மேற்கல்வியை லண்டன், அமெரிக்கா போன்ற இடங்களில்

பெற்றிருந்தனர். அவர்களில் சிலர் மாக்ஸிய கோட்பாடுகளினால் கவரப்பட்டவர்களாகவும் இருந்தனர். அவர்களில் கலாநிதி. என். எம். பெரேரா, கொல்வின். ஆர்.டீ.சில்வா, பிலிப் குணவர்த்தனா, கலாநிதி எஸ்.ஏ.விக்கிரமசிங்க, லெஸ்லி குணவர்த்தனா போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர். கலாநிதி கொல்வின் ஆர்.டீ.சில்வாவின் தலைமையின் கீழ் தொழிலாளர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.

1933 இல் பெப்ரவரிக்கும், யூலைக்கும் இடையில் வெள்ளவத்தை ஆலையில் வேலை செய்த 1400 தொழிலாளர்கள் மரதன் முறையிலான வேலை நிறுத்தம் செய்தனர். இவ்வேலை நிறுத்தம் தொழிலாளர் மத்தியில் மாக்ஸியக் கருத்துக்கள் பரவ வழி வகுத்ததுடன் 1935 சம சமாஜ இயக்கம் உருவாகவும் காரணமாயிற்று. இவ் வேலை நிறுத்தம் தோல்வி அடைவதற்கு குணசிங்கா கருங்காலிகளைக் கொடுத்து உதவி செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கட்டத்துடன் குணசிங்காவின் சகாப்தம் முடிவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

**பொருளாதாரத் தேக்கமும் குணசிங்காவின் திடீர் வீழ்ச்சியும்**

இலங்கைத் தொழிலாளர் இயக்கம் 1928-1929 இல் தொழிற் சங்க நடவடிக்கை, அரசியல் நடவடிக்கை ஆகியவற்றில் உச்ச நிலை அடைந்தது. பொருளாதார செழிப்புக் காலத்தில் வேலை வாய்ப்புக்கள் அதிகரிக்கும் நிலையில் தொழிற் சங்க நடவடிக்கைகள் வெற்றி பெற வாய்ப்புக்கள் அதிகமாக இருந்தன. வெற்றியும் கண்டன. ஆனால் 1929 இல் தொடங்கிய உலகப் பெரு மந்தம் இலங்கையையும் தாக்கிய போது ஏ. ஈ குணசிங்காவால் முன்நின்று நடாத்தப்பட்ட வேலை நிறுத்தங்கள் (1929-1933) பல தோல்வி அடைந்தன. பொருளாதாரத் தேக்கம் மிதவாதிகளுக்கும், தீவிரவாதிகளுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தியது. முதலாளித்துவ வாதிகள் தமது நன்மையைப் பாதுகாக்கும் பொருட்டு கூலிக் குறைப்பு, வறியவர்களைப் பாதிக்கும் வரிகளை விதித்தல், வேலைக் குறைப்புச் செய்தல் என்பவற்றில் ஈடுபட்டனர். அரசாங்கம் மற்றும் முதலாளிகள்

போன்றவற்றின் மூர்க்கத்தனமான எதிர்ப்பு, பொருளாதாரத்தில் தேக்கநிலை, குணசிங்காவின் இந்திய எதிர்ப்புவாதம், புதியவர்களின் எழுச்சி, போன்ற பல்வேறு காரணிகளால் குணசிங்காவின் தலைமையிலான வீழ்ச்சி திடீரென 1930 களின் ஆரம்பத்தில் அமைந்தது.

இலங்கையின் ஏற்றுமதி, இறக்குமதிப் பொருளாதாரம் உலக சந்தையிலேயே பெரிதும் தங்கியிருந்தது. அமெரிக்கா, மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 1926 களில் ஏற்பட்ட பொருளாதாரத் தேக்கம் இலங்கையையும் பாதித்தது. இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள் முதல் விளைவுப் பொருட்களாகவும், இறக்குமதிப் பொருட்கள் உணவு மற்றும் தயாரிப்புப் பொருட்களாகவும் இருந்தன. இக்கால கட்டத்தில் பொருளாதாரத் தேக்கமானது விலை வீழ்ச்சியை விடப் பெரிதாக இருந்ததால் இலங்கையின் சென்மதி நிலுவை பெரும் பாதக நிலையினை அடைந்தது. இதைப் பின்வரும் புள்ளி விபரங்களில் இருந்து நாம் அறிந்து கொள்ள முடியும்.

| ஆண்டு | ஏற்றுமதி (மில். ரூபா) | இறக்குமதி (மில். ரூபா) | வர்த்தக நிலுவை |
|---|---|---|---|
| 1926 | 503 | 395 | 106 |
| 1927 | 448 | 407 | 41 |
| 1928 | 393 | 412 | -19 |
| 1929 | 407 | 429 | -22 |
| 1932 | 170 | 196 | -26 |

உலக சந்தையில் தேயிலை, இறப்பர், கொப்பறா, காரீயம், போன்றவற்றின் விலைகளில் திடீர் வீழ்ச்சியை அனுபவித்தன. இதனைப் பின்வரும் புள்ளிவிபரங்கள் காட்டுகின்றது. இவை 1929 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகக் கொண்டு கணிக்கப்பட்ட விலைச் சுட்டெண்களைக் காட்டுகிறது.

| ஆண்டு | தேயிலை | இறப்பர் | கோப்பறா | காரீயம் |
|---|---|---|---|---|
| 1929 | 100 | 100 | 100 | 100 |
| 1930 | 78 | 15 | 65 | 105 |
| 1931 | 59 | 08 | 43 | 94 |
| 1932 | 43 | 06 | 52 | 66 |
| 1933 | 47 | 06 | 42 | 49 |

இது இவ்வாறிருக்க, முக்கிய நுகர்வுப் பொருட்களான அரிசி, சீனி போன்றவற்றின் விலைகள் வீழ்ச்சியடைந்தமை நுகர்வோருக்கு நிவாரணம் அளிப்பதாக இருப்பினும் தயாரிப்புப் பொருட்களின் விலைகள் ஓரளவுக்கு உச்சநிலையிலேயே இருந்தன. உள்ளூர் விலை வீழ்ச்சியிலும் பார்க்க பண வருமான வீழ்ச்சி கூடுதலாக இருந்ததால் மெய் வருமானம் வீழ்ச்சியடைந்தது.

இக்காலகட்டத்தில் அரசாங்கம் இங்கு எதிர் நோக்கிய விடயம் வேலையின்மைப் பிரச்சினையாகும். அரசாங்கத் திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், பெருந்தோட்டங்கள் என்பனவற்றில் பெருமளவு வேலைக்குறைப்பு நடந்தன. இதன் காரணமாக மக்களின் நுகர்வுச் செலவு குறைந்தது. இதனால் பொருட்களின் விலையும் குறைந்தது. உதாரணம் உள்ளூர் அரிசியின் விலை 1926 இல் புசல் ரூபா 5.90 இலிருந்து 1933 இல் புசல் ரூபா 3.50 ஆகக் குறைந்தது. நகரப்புறங்களில் திறமை வாய்ந்த மற்றும் திறமையற்ற தொழிலாளர்கள் இடையேயும், அரசாங்க உத்தியோகத்தர் இடையேயும் வேலையின்மை அதிகரித்தது. பல வீடுகளில் வேலைக்காரர்கள் கூட வேலையில் இருந்து நீக்கப்பட்டனர். அரசாங்கமும், கெயின்ஸிற்கு முந்திய முறையைப் பின்பற்றி செலவுக்குறைப்பு, இறக்குமதி வரி அதிகரிப்பு, வருமானவரி அதிகரிப்பு, தேயிலை, இறப்பர் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், பெருந்தோட்டங்களில் கூலிக் குறைப்புப் போன்றவற்றையும் செய்தது. இத்தகைய நிலைமைகளுக்கும் இடையே தான் தொழிற்சங்கம் இயங்க வேண்டியிருந்தது.

வேலையின்மை அதிகம் நாட்டில் இருக்கின்ற போது தொழிற் சங்கத்தின் பலம் குறைவாக இருக்கும். இவ்வகையில் 1929–1933 இற்கும் இடையில் நாட்டில் காணப்பட்ட வேலையின்மை தொழிற் சங்க நடவடிக்கைகளில் குணசிங்க பெற்ற தோல்விகளுக்கு முக்கிய காரணமாகும். மேலும் தேக்க காலத்தில் வேலை கொள்பவர்கள் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தொழிற்சங்கம் குறித்த தமது கொள்கையைக் கடுமையாக்கிக் கொண்டனர். அவர்களின் நிதிப் பலத்துடன் குணசிங்க எதிர்த்து நின்று போராடுவது கடினமாக இருந்தது. பொருளாதாரத் தேக்க காலத்தில் வேலையின்மை அதிகமாக உள்ள போது ஓரிடத்தில் வேலை நிறுத்தம் நடைபெறின் அதற்கு ஆதரவாக ஏனைய இடங்களில் வேலை நிறுத்தம் நடைபெறுவது அல்லது பரவுவது குறைவாக இருக்கும். தேக்க காலத்தில் நடந்த சில வேலை நிறுத்தங்களில் குறிப்பாக 1931 இல் *Lake House* இல் நடந்த வேலை நிறுத்தம் மற்றும் 1931ல் *Queen's Hotel* இல் நடந்த வேலை நிறுத்தம், ஆகியவற்றின் போது இந்தியாவிலிருந்து தொழிலாளர்களை வேலைக்கு எடுத்தமை வேறு தொழிலாளர் களை வேலை நிறுத்தம் செய்யும் தொழிலாளர்களுக்குப் பதிலாக வேலைக்கு அமர்த்த முனைந்தமை போன்றவற்றால் வேலை நிறுத்தங்கள் தோல்வியுற்றது.

இலங்கைத் தொழிற் சங்க வரலாறானது, போராட்டத் தன்மை கொண்டதாகவே பெரும்பாலும் இருந்து வந்தது. அதனையே வழியாக ஏற்றுக் கொண்டு வந்த குணசிங்க 1931 இல் *Time of Ceylon* நிறுவனத்தில் நடந்த வேலை நிறுத்தத்தின் போது காந்தீய வழியையும் நாடினார். இது பல தொழிலாளர் களினால் விரும்பப்படவில்லை. அத்துடன் இக்காலத்தில் பல புதிய பலம் படைத்த இளைஞர்கள் நடவடிக்கைகளில் ஈடுபட முன் வந்தமையும் அவர்கள் போராட்டத்தன்மை கொண்டவர்க ளாக இருந்தமையும் குணசிங்காவின் தலைமையில் வீழ்ச்சி ஏற்படக் காரணமாயிற்று. அத்துடன் குணசிங்காவின் இந்திய எதிர்ப்பு வாதமும் அவரது தலைமையின் வீழ்ச்சிக்கு வழி வகுத்தது. தேக்க காலத்தில் பலர் வேலையற்றிருந்தார்கள்.

றெயில்வே துறையிலும், கொழும்புத் துறைமுகத்திலும் வெள்ளவத்தை நெசவாலை போன்ற பாரிய தொழிற்சாலை களிலும் பெரும்பாலான தொழிலாளர்கள் இந்தியர்களாகவே இருந்தார்கள். இதனால் இடது சாரிகள் தொழிற் சங்க வேலையில் ஈடுபட்ட போது பெரும்பாலான நகர்ப்புற இந்தியத் தொழிலாளர்கள் ஏ.ஈ.குணசிங்காவின் தொழிற் சங்கத்தை விட்டு விலகி இடது சாரிகளின் தொழிற் சங்கத்துடன் சேர்ந்தனர். மலையகத் தொழிலாளர்களின் பிரதிநிதியாக அப்போது திகழ்ந்த நடேசைய்யரும் இடது சாரிகளை வலுவாக ஆதரித்தார்.

உண்மையில் தொழிற் சங்கத் தலைவர் என்பவர், தொழிலாளர்களின் நம்பிக்கைக்கு ஆதரவாகத் திகழ வேண்டும். ஆனால் 1933 இல் வெள்ளவத்தை நெசவாலையில் நடந்த வேலைநிறுத்தப் போராட்டத்தை நசுக்க ஏ.ஈ.குணசிங்க கருங்காலி களை அனுப்பியதால் போராட்டம் தோல்வி அடைந்தது. இச்சம்பவம் பின்வருமாறு, அதாவது வெள்ளவத்தையின் நெசவாலையின உரிமையாளர்கள் இந்தியராவர். 1890 இல் ஆரம்பிக்கப்பட்ட அத்தொழிற்சாலை அன்றிருந்த நெசவாலை களில் மிகப்பெரியதாகும். 1400 தொழிலாளர்கள் அதில் வேலை செய்தனர். குணசிங்காவின் தலைமையில் அங்கு 1923, 1926, 1929 ஆகிய ஆண்டுகளில் வேலை நிறுத்தங்கள் நடந்தமையும் குறிப்பிடத்தக்கது.

பொருளாதார மந்தம், விற்பனைச் சந்தையில் ஜப்பான் துணிகளின் ஆதிக்கம் போன்ற பலகாரணிகளால் தொழிற்சாலை நிர்வாகம் 1933 பெப்ரவரியில் சம்பளக் குறைப்பை அறிவித்தது. இதனை எதிர்த்து முழுத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். ஆலை நிர்வாகம் தமது சார்பில் குணசிங்காவைத் தலையிடுமாறு வேண்டியது. குணசிங்க தொழிலாளர்களை வேலைக்குத் திரும்புமாறு புத்திமதி கூறினார் அதற்குத் தகுந்த முன்னறிவித்தல் இல்லாமல் வேலை நிறுத்தம் செய்தது, தமது சங்கத்திற்கும், முதலாளிகள் சமாஜத்திற்கும் இடையில் 1929இல் நடைபெற்ற கூட்டு ஒப்பந்தத்தை மீறிய

செயல் எனக் கூறினார். மேலும் வேலை நிறுத்தம் செய்த பெரும்பாலானவர்களின் சங்க அங்கத்துவம் காலாவதி ஆகியதைச் சுட்டிக் காட்டினார். இதனால் தொழிலாளர்கள் அதிர்ச்சி அடைந்தனர். வேலை நிறுத்தம் 2 மாதங்கள் தொடர்ந்தது. ஆலைத் தொழிலாளர்களில் ⅔ பகுதியினர் மலையாளிகளாகவும், ⅓ பகுதியினர் சிங்களவர்களாகவும் இருந்தனர். அச்சமயம் பொருளாதாரத் தேக்கம், வேலையில்லாத் திண்ணடாட்டம் போன்ற காரணங்களால் இந்திய எதிர்ப்புணர்வு மேலோங்கியிருந்தது. குணசிங்க மேலும் இதனைத் தூண்டினார். அத்துடன் சிங்களத் தொழிலாளர்களை லொறிகளில் ஏற்றிக் கருங்காலிகளாக நெசவாலைக்கு அனுப்பினார். வேலைக்குத் திரும்ப விரும்பும் வேலை நிறுத்தக்காரர்களுக்கு பாதுகாப்பு அளிப்பதே இதன் நோக்கம் எனக் கூறினார். இவற்றால் வேலை நிறுத்தம் தோல்வி கண்டது. அதற்குத் துணையாக நின்ற குணசிங்காவை விட்டு பல தொழிலாளர்கள் வெளியேறினர். 1922 - 1930 இற்கும் இடையில் தொழிலாளர்களின் வீழ்ச்சியானது தொழிற்சங்கத்தின் பெருந் தலைவராகக் கருதப்பட்ட குணசிங்க 1930களில் ஆரம்பத்தில் வீழ்ச்சி அடைய வழிகோலிய போதும் கூட அவரது பங்கைக் குறைத்து மதிப்பிட்டு விட முடியாது.

**போர் இடைக்காலத்தில் தொழிற்சங்கங்கள் ஏன் போராட்டத் தன்மை கொண்டனவாக இருந்தன எனபதனை ஆராய்வோம்**

உலகளாவிய ரீதியில் இடம்பெற்ற முதலாம் உலகப் போரின் பின்பும், இரண்டாம் உலகப் போருக்கு இடையிலும் இலங்கையில் தோன்றிய தொழிற் சங்கங்கள் குறிப்பாக ஏ.ஈகுணசிங்காவின் தலைமையின் கீழ் இயங்கிய இலங்கையின் தொழிலாளர் சங்கம் தொழிலாளர் நலன்களைப் பெறுவதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் போராட்டத் தன்மைகள் கொண்டனவாக இருந்தன. கூலி அதிகரிப்பு, வேலைத் தளத்தில் நல்ல வசதி, அதிக லீவு நாட்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்வதற்காக இச்சங்கங்கள் வேலை நிறுத்தங்கள், பாரிய கூட்டங்கள், வன்முறைகள் ஆகியவற்றைக் கையாண்டதால்

இக்காலத் தொழிற் சங்கங்கள் போராட்டத்தன்மை கொண்டனவாக இருந்தன என்று கூறப்படுகின்றது. இத்தகைய தன்மைகளை அவை கொண்டிருந்தமைக்கு சர்வதேச ரீதியான விடயங்களும் பொறுப்பாக இருந்தன.

இலங்கையின் உண்மையான தொழிற் சங்கம் ஏ.ஈ.குணசிங்காவினால் 1922 இல் அமைக்கப்பட்ட இலங்கைத் தொழிலாளர் சங்கத்துடன் அரம்பிக்கின்றது.. ஏ.ஈ.குணசிங்க கண்டியில் உள்ள ஆனந்தாக் கல்லூரியில் கல்வி கற்றுப்பின் றெயில்வேத் திணைக்களத்தில் லிகிதராகக் கடமையாற்றிப் பின்னர் *Search Light* பத்திரிகைக்கு வாரா வாரம் அரசியல், சமூகம் ஆகியவை பற்றிக் கட்டுரைகள் எழுதுவோராக இருந்தார். இளைஞராக இருந்த வேளையில் பல சமூக சேவைகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். தொழிச்சங்க வாதிகள் பலரது வாழ்க்கை பற்றிய நூல்களையும் இத்தாலிய சுதந்திரம், மற்றும் ஐரிஸ் (மரண தண்டனை விதிக்கப்பட்ட வர்கள்) தலைவர்களின் பேச்சுக்கள் பற்றிய புத்தகங்கள் போன்றவற்றை வாசித்து அதன் காரணமாகப் போராட்டத்தன்மை கொண்டவராக மாறினார். மேலும் அக்காலத்தில் இருந்த இலங்கைத் தேசியத் தலைவர்கள் மிதவாதிகளாக உள்ளார்கள் என்றும் அவர்களின் நடவடிக்கைகள் மிக மந்தமான போக்கினைக் கொண்டதாக இருக்கின்றதென்றும் அதனைத் தீவிரப் படுத்த வேண்டுமென்றும் விரும்பினார். அந்நிய தேசிய வாதிகளின் இயக்கங்களின் குறிப்பாக இந்தியத் தீவிரவா திகளின் நடவடிக்கைகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். அத்துடன் 1915 ஆம் ஆண்டு சிங்கள முஸ்லீம் கலவரத்தின் போது இலங்கையில் இருந்த பிரித்தானிய ஆட்சியாளரால் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு 52 நாட்களில் சிறையில் இருந்ததால் தீவிர பிரித்தானிய எதிர்ப்பு வாதியாக மாறினார். இத்தகைய ஒருவரைத் தலைவராக கொண்டமைந்த தொழிற் சங்கம் இயல்பாகவே போராட்டத் தன்மை கொண்டதாக மாறியதில் வியப்பில்லை.

போராட்டத் தன்மை கொண்ட சங்கங்களுக்குப் பொது மக்கள் மத்தியிலும் பௌத்த குருமார் மத்தியிலும் இருந்த ஆதரவு அவரின் போராட்டத் தன்மையை அதிகரித்தது. பொது மக்கள் ஆதரவு பெறாத எந்த நடவடிக்கையும் எங்கும் சுலபமாக வெற்றி பெறுவதில்லை. ஆனால் இக்காலத்தில் தொழிற் சங்கங்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தங்களிற்குப் பொது மக்கள் ஆதரவு கொடுத்ததைப் பல விடயங்களில் காணலாம். உதாரணம் 1927 இல் துறைமுகத்தில் நடந்த வேலை நிறுத்தத்தை இந்தியத் தொழிலாளர்களை இறக்குமதி செய்தல் மூலம் முறியடிக்க முனைந்த போது பட்டிணத்தில் இருந்த சாப்பாட்டுக் கடைக்காரர்கள் பலர் இந்தியத் தொழிலாளர்களுக்கு உணவு வழங்க மறுத்தமை, வேலை நிறுத்தக்காரர்களுக்கு உணவு வழங்கியமை, அது மட்டுமல்லாது பொது மக்கள் பலர் பண உதவி செய்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். பொது மக்களின் ஆதரவு வேலைநிறுத்தக்காரரை மேலும் போராட்டத் தன்மை கொண்டவர்களாக்கியது. அத்துடன் வேலை நிறுத்தக் காரரை ஆதரித்து பௌத்த குருமார் பலர் பகிரங்கக் கூட்டங்களில் பேசினர். அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த அநாகரீக தர்மபாலா என்பவர் இவ்வேலை நிறுத்தங்களைத் தேசிய உணர்ச்சி பற்றிய தேர்தல் விஞ்ஞாபனம் என வர்ணித்து குணசிங்காவிற்கு நிதியுதவி செய்தார். மேலும் வன்முறையில் அதிக நம்பிக்கையுடைய மற்றைய தொழிலாளர் சங்கங்களும் ஏ. ஈ குணசிங்காவின் சங்கத்துடன் சேர்ந்திருந்தன. உதாரணம் 1901, 1920, 1923 ஆம் ஆண்டுகளிலேயே வேலை நிறுத்தத்தை மேற்கொண்டிருந்த வள்ள ஓட்டுனர் சங்கமும் குணசிங்காவுடன் தற்போது சேர்ந்திருந்தது. துறைமுகத் தொழிலாளர்கள் பொதுவாகப் போராட்டத் தன்மை கொண்டவர்களாக இருந்தார்கள். 1906 ஆம் ஆண்டு வண்டிற்காரர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலைநிறுத்தம் வெற்றியினைக் கண்டிருந்தது. அவர்கள் தமது வேலை நிறுத்தத்தின் போது வன்முறையைக் கையாளுதல் வெற்றிக்கு வழி வகுக்கும் என எண்ணியமையும் இக்காலத்தில் தொழிற் சங்கங்கள் போராட்டத் தன்மை கொண்டனவாக இருந்தமைக்கு காரணமாயிற்று.

இக்காலத்தில் அரசாங்கத் துறையில் வேலை செய்தோருக்கும் தனியார் நிறுவனங்களில் வேலை செய்தோருக்கும் இடையே கூலி அமைப்பில் பாரிய வேறுபாடு காணப்பட்டது. 1928 இல் கூலி பற்றி ஆராயும் படி நியமிக்கப்பட்டிருந்த குழுவின் கருத்துப் படி அரை அரசாங்கத் துறைகளில் இருந்தோர் தனியார் துறைகளில் இருந்தோரிலும் பார்க்கக் கூடிய கூலி பெற்றனர். அத்துடன் அரசாங்கத் துறையில் நீண்ட காலம் வேலை செய்தோருக்கு ஓய்வூதியம் வேலை செய்யும் நாட்களில் விபத்து ஏற்படின் நட்ட ஈடு, உபகாரத் தொகை போன்றனவும் கிடைத்தன. தனியார் துறையில் இருந்தவர்கள் மிகவும் குறைந்த கூலியே பெற்றனர். இக்குழுவின் கருத்துப்படி மிகப் பெரிய நிறுவனங்களில் வேலை செய்தவர்களில் அரைவாசிப் பேர் நாளொன்றிற்கு ரூபா 1.00 இற்குக் குறைந்த சம்பளமே பெற்றனர். அத்துடன் மாதம் ஒன்றிற்கு சாராசரியாக 24.75 நாட்களே வேலை செய்தனர். ஓய்வூதியம் அவர்களுக்கு இருக்கவில்லை. நகர்ப் புறத்தில் தனியார் துறைகளில் வேலை செய்த தொழிலாளர்களே அதிகளவு இருந்தனர். 1925 இல் சிறிய அளவு கூலி வழங்கப்பட்டிருப்பினும் பல தொழிலாளர்கள் கடனில் ஆழ்ந்திருந்தனர். காரணம் முதலாம் உலக யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட வாழ்க்கைச் செலவு அதிகரிப்பிற்கேற்ப கூலி வழங்கப்படாமை ஆகும். 1914-1920 இற்கும் இடையில் வாழ்க்கைச் செலவு 70% ஏறியிருந்தது. சமாதான வழிகள் மூலம் முதலாளிமார் சம்பள உயர்வு கொடுக்கும் நிலை அக்காலத்தில் இலங்கையில் இருக்கவில்லை. இதனால் தொழிற் சங்கங்கள் போராட்டத் தன்மை வாய்ந்த நடவடிக்கைகளைக் கையாண்டன.

இலங்கையில் காணப்பட்ட அரசியல் நிலையும் தொழிற்சங்க நடவடிக்கைகளை போராட்டத்தன்மை வாயந்தனவாக்கின. இக்காலத்தில் அரசியலில் இலங்கைத் தேசிய காங்கிரஸ் முக்கியத்தவம் பெற்றிருந்தது. இதில் செல்வந்தர்களே முக்கிய பதவி வகித்தனர். 1919 இல் சேர் பொன் அருணாசலம் என்பவர் தொழிலாளர்களின் நலன்களை முன்னேற்ற எடுத்த நடவடிக்கைகள் இங்கு தொடர்ந்து

நடக்கவில்லை. 1923 ஆம் ஆண்டின் வேலை நிறுத்தத்தின் போதும் இக்காங்கிரஸ் தொழிலாளர்களுக்கும் ஆதரவு தெரிவிக்கவில்லை. அப்போது இதன் தலைவராக இருந்த எஸ். ஜே. சி. பெரேரா (இவர் 1893 இல் நடந்த அச்சுத் தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு உதவியவர்) புரட்சிகர நடவடிக்கையின் ஆபத்துப் பற்றி எச்சரிக்கை செய்து வேலை நிறுத்தம் என்ற ஆயுதத்தை நிராகரித்தார். மேலும் இலங்கை தேசிய காங்கிரஸ் 1919 இல் அமைக்கப்பட்டது. அதன் ஆரம்ப காலங்களில் தொழிலாளர் பிரச்சனையில் கவனம் செலுத்திய போதும் தொழிலாளர் நன்மையின் பொருட்டு சில நிறுவனங்களை ஏற்படுத்திய போதும் நீண்ட காலத்தில் செயல் திறமை வாய்ந்த தலைமை பீடத்தைத் தொழிலாளர்களுக்கு வழங்குவதில் தவறியிருந்தது. இதனால் தொழிற் சங்கமானது போராட்டத் தன்மை கொண்ட தலைமைப்பீடத்தின் கீழ் ஒழுங்கமைக்கப்பட வேண்டியதாயிற்று.

சர்வதேச ரீதியாக ஏற்பட்ட நிகழ்ச்சிகளும் தொழிற்சங்கம் போராட்டத் தன்மை கொண்டனவாக அமைவதற்கு வழிவகுத்தது. 1917 இல் ரசியாவில் ஏற்பட்ட புரட்சி இலங்கைத் தொழிலாளர்களுக்குச் சில புதிய பாடங்களைப் படிப்பித்திருந்தது. ஒரு நாட்டில் தொழிலாளர் வர்க்கத்தின் முக்கியத்துவத்தினை உணரச் செய்திருந்தது. 1925–1927 இற்கும் இடையில் ஏற்பட்ட சீனப் புரட்சியும் தொழிலாளர் முக்கியத்துவத்தை உணர்த்தியது. மேலும் மகாத்மா காந்தியின் தலைமையின் கீழ் இந்தியாவில் வளர்ந்த தேசிய இயக்கமும் சுரண்டப்படும் தொழிலாளர் வர்க்கத்தினருக்கும் சில நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டிய தேவை பற்றி எடுத்துக் கூறியது. இவற்றினால் உந்தப்பட்ட தொழிலாளர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட தொழிற் சங்கம் போராட்டத் தன்மை கொண்டதாக இருந்தது என்பதில் வியப்பில்லை எனலாம்.

### பெருந்தோட்டத்துறையில் தொழிற்சங்க வளர்ச்சி

இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாகத் திகழ்கின்ற பெருந்தோட்டத் துறையில் தொழிற் சங்க வரலாறானது 19 ஆம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய முதலாளித்துவம் பெருந்தோட்டத் துறையிலிருந்தே ஆரம்பித்தது. பெருந்தோட்டத் துறையில் 19 ஆம் நூற்றாண்டின் முடிவில் ஏறைக்குறைய 2 லட்சம் தொழிலாளர்கள் இருந்த போதும் (அதே வேளை நகரப்புறத்தில் 75,000 தொழிலாளர்களே இருந்தனர்) 1931 ஆம் ஆண்டு வரை அப்பகுதியில் ஒழுங்கான முறையில் தொழிற் சங்கம் உருவாகவில்லை. அதற்கு பல காரணங்கள் பொறுப்பாக இருந்தன.

தொழிலாளர்களுக்கு அவசியமான தொழிற் சங்கம் ஒன்று அமைக்கப்பட வேண்டுமாயின் சுதந்திரமான தொழிலாளர்களாக உழைப்பாளிகள் இருத்தல் வேண்டும். ஆனால் பெருந்தோட்டத் துறையில் வேலை செய்தவர்கள் அரை அடிமைகளாக வேலை செய்தனர். அவர்கள் தமது இஸ்டப்படி தமக்கு விருப்பமான இடத்தில் விரும்பிய வேலை செய்வதற்கு சுதந்திரம் இருக்கவில்லை. பல்வேறு முறைகளால் அவர்கள் கட்டுப்பட்டிருந்தனர். அவர்களது வதிவிடமான லயன் அறைகளைத் தோட்ட நிர்வாகம் வழங்கியிருந்தது. இது ஒருவகையில் தோட்டத்தோடு தொழிலாளர்களை நிரந்தரமாகப் பிணைக்கும் கட்டுப்பாடாகும். ஏனெனில், தோட்டத்தில் வேலை செய்யாதவர்கள் லயன் அறையை விட்டு வெளியேற வேண்டும். அவ்வாறு வெளியேறின், அவன் வேலை செய்வதற்கு வேறு இடம் இருக்கவில்லை. 1865 ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட தொழிற் சட்டத்தின் படி வேலையை விட்டு நீங்குவது கூடத் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்பட்டது. எவராவது தோட்டங்ளை விட்டு வெளியேறினால் அவர்களைச் சிறையில் அடைக்கவும் சட்டம் வழிவகுத்தது. வெளியேறினாலும் பக்கத்தில் உள்ள கிராமங்கள் சிங்களக் கிராமங்களாக இருந்ததால் மொழி தெரியாமல் ஒன்றும் செய்ய முடியாமல் இருந்தது. இவ்வாறான

அரைகுறை அடிமை நிலையில் இருந்தவர்களால் தொழிற் சங்கம் ஒன்றை ஏற்படுத்துவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத காரியமாக இருந்தது. பெருந்தோட்டங்களில் வேலைசெய்த தொழிலாளர்கள் இந்தியாவிலிருந்து கிராம வாரியாக அப்படியே பெர்த்துக் கொண்டு வரப்பட்டு தோட்டங்களில் அமர்த்தப்பட்டிருந்தனர். அவர்கள் இந்தியாவில் வாழ்ந்த அதே உறவினர்கள் மத்தியில் இங்கும் வாழ்ந்தனர். எனவே இவர்களது உறவுத்தொடர்புகளும் கூட சாதி குடும்பம் என்ற எல்லைகளுக்கு அப்பால் பரவவில்லை. இதனால் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஏற்பட்ட மாற்றங்களைக் கூட இவர்களால் தெரிந்து கொள்ள முடியவில்லை. இதனால் நகர்ப்புற தொழிற்சங்கங்கள் தோன்றி பல ஆண்டுகளின் பின்பே இங்கு தொழிற்சங்கம் உருவாக முடிந்தது. மேலும் தொழிற் சங்கத்தில் அங்கத்தவர்களாகச் சேர வேண்டுமாயின் சந்தாப் பணம் செலுத்த வேண்டும். ஆனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் கொடிய வறுமையினால் வாடினர். இலங்கையில் ஆகக் குறைவான சம்பளம் அவர்களுக்கே வழங்கப்பட்டது. ஆண்களுக்கு ஒரு நாளைக்கு 33 சதமும் பெண்களுக்கு 25 சதமும் மட்டுமே கூலியாக வழங்கப்பட்டது. இச்சம்பளம் கூட ஒழுங்கு முறையாக வழங்கப்படவில்லை. சில சமயங்களில் 3 மாதங்களுக்கு ஒரு முறை சம்பளம் வழங்கப்பட்டது. கங்காணிமார்கள் தொழிலாளர்களின் சம்பளத்தில் மோசடிகள் பல செய்தமை தெரியவந்தது. கங்காணிமார் இந்தியாவிலிருந்து தொழிலாளர்களைக் கூட்டிக்கொண்டு வந்த முறையினாலும், துண்டு முறையினாலும் தொழிலாளிகள் கங்காணிமாருக்கு எப்போதும் கடனாளிக ளாகவே இருந்தனர். தொழிலாளர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை கங்காணியோ அல்லது தோட்ட நிர்வாகமோ நடாத்தும் கடைகளிலிருந்தே கடனுக்குப் பெறவேண்டியிருந்தது. இக்கடன் தொகையைக் கழித்த பின்பே மிகுதிச் சம்பளம் கொடுக்கப்படும். பொருட்களின் விலை கூட்டி விற்கப்பட்டதால் தொழிலாளர்கள் சம்பளத்தில் மிகச் சிறிய பகுதியையே பெற்றனர். இதனால் தொழிற்சங்கத்துக்கு அங்கத்துவப் பணம்

செலுத்த முடியாத நிலையில் இருந்தனர்.

கோப்பித் தோட்டங்களுக்கு நிரந்தரமாகத் தங்கியிருந்து தொழில் செய்யும் பல தொழிலாளர்கள் தேவைப்படவில்லை. அறுவடைக்காலத்தில்தான் அதிக தொழிலாளர்கள் தேவைப்பட்டனர். (August - November) இதனால் ஆரம்பத்தில் இந்தியத் தொழிலாளர்கள் பலர் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே வந்து போய்க்கொண்டிருந்தார்களேயொழிய நிரந்தரமாக இருந்து வேலை செய்பவர்களாக இருக்காததாலும் ஆரம்பத்தில் தொழிற்சங்கம் அமைக்கும் சிந்தனைகள் தோட்டத்துறையில் இடம்பெறவில்லை.

மேலும் 19 ஆம் நூற்றாண்டு முழுவதிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்ப காலங்களிலும் மலையகத் தமிழர் மத்தியிலும் தேசிய உணர்வு வளர்ச்சி பெற்றிருக்கவில்லை. அவர்கள் இந்தியாவுடனான தொடர்பை முழுமையாகத் துண்டித்துக் கொண்டிருக்காத காரணத்தினால் இவர்களில் ஒரு பகுதியினர் அடிக்கடி இந்தியா சென்று வந்தனர். இதனால் இங்கு தொழிற் சங்கத்தில் சேர வேண்டும் என்ற எண்ணமும் அவர்களுக்கு இருக்கவில்லை. 1920களில் இந்தியத் தொழிலாளர்கள் இலங்கையில் பெருமளவு வேரூன்றி இருந்த போதும் அவர்களிடம் தேசிய உணர்வு காணப்படாத காரணத்தால் ஏ.ஈ.குணசிங்க போன்றவர்கள் ஆரம்பத்தில் தோட்டத் தொழிலாளர்களைத் தொழிற் சங்கத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தையும் கொண்டிருக்க வில்லை.

மேலும் பெருந் தோட்டத் தொழிலாளர்கள் இயந்திரக் கைத் தொழிலாளர்களாகவோ, தேர்ச்சி பெற்ற தொழிலாளர் களாகவோ இருக்கவில்லை சமூக விஞ்ஞானம் பற்றிய சர்வதேசக் கலைக் களஞ்சியத்தின் படி 'இவர்கள் தேர்ச்சியற்ற தொழிலாளர்கள் எனவும் இவர்களின் முக்கிய தகமை மேற்பார்வையாளர்களுக்கும், முகாமையாளர்களுக்கும் கீழ்ப்படி வதாகும்.' என்று கூறுகின்றது. அடுத்து வெளி உலகமோ, நடப்பு

நிலைகளோ தெரியாமல் தோட்டத் தொழிலாளர்களின் அறிவை நிர்வாகமே திட்டமிட்டுத் தடைப்படுத்தி வந்தது. இவர்களால் கோவில்கள் அமைக்கப்பட்டன. மதுக் கடைகள் திறக்கப்பட்டன. ஆனால் பாடசாலைகள் உருவாக்கப்படவில்லை. இதன் விளைவாக 1911 இல் கூடத் தோட்டப் பகுதிகளில் கல்வியறிவற்றோர் வீதம் ஏறக்குறைய 100% ஆக இருந்தது. பத்திரிகை கூட வாசிக்க முடியாத, கையெழுத்துப் போடக் கூடத் தெரியாத தொழிலாளர்கள் எவ்வாறு தொழிற் சங்கத்தினை உருவாக்குவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியும்.

மேலும் தோட்டத் துரைமாரும் தோட்டப் புறங்களில் தொழிற் சங்கங்கள் தோன்றுவதைத் தடை செய்வதில் கண்ணும் கருத்துமாக இருந்தனர். கொழும்பில் வேலை நிறுத்தம், மற்றும் போரட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அதனை அறிய விடாமல் தொழிலாளரைத் தனிமைப்படுத்துவதில் தோட்டத் துரைமார் கவனம் எடுத்திருந்தனர். உதாரணமாகக் 1923 இல் கொழும்பில் பொது வேலை நிறுத்தம் நடந்த போது பெருந்தோட்டச் சொந்தக்காரர் தமது தொழிலாளர்கள் நகரத்துக்குச் செல்வதில் இருந்து தடுத்தனர். மேலும் வெளியாட்கள் தோட்டப் பகுதிக்குச் சென்று சமூக, அரசியல் கல்விப் பணிகள் செய்ய முடியாது அத்து மீறல் சட்டம் அதனைத் தடை செய்தது. இச் சட்டம் 1957 இல் தான் நீக்கப்பட்டது. மேலே கூறிய காரணங்களினால் தோட்டப் பகுதியில் தொழிற் சங்கத்தின் ஆரம்பகாலத்தில் பிந்தியதாக இருந்தது.

மலையக மக்கள் படும் இன்னல்களுக்கு எதிராக இந்தியாவில் மாத்திரம் அல்லாது வேறு பல நாடுகளிலும் மனிதாபிமான இயக்கங்களும் தனி நபர்களும் குரல் கொடுத்தனர். பிரித்தானியாவில் தாராண்மை வாதிகளாக *C.H. Schwamn, Herbert , Robert, G.H Weir* போன்றோரே இவ்விடயத்தில் அக்கறை எடுத்தவர்களாகக் குறிப்பிடலாம். இலங்கையில் சேர் பொன். அருணாசலம் மலையக மக்கள் தொடர்பாகக் குரல் கொடுக்கத் தொடங்கிய முதல் நபர் எனலாம். இவற்றின்

காரணமாக 1912 இல் மருத்துவ வசதிச் சட்டம், 1920 இல் கல்வி சகாயச் சட்டம் போன்றன இயற்றப்பட்டன.

சேர் பொன். அருணாசலத்தின் வாக்கு வாதத்தினால் இந்திய அரசாங்கத்தினைத் திருப்தி செய்யும் நோக்குடனும் துண்டு முறையை நீக்குவதற்கும் நடேச ஐயரின் பங்களிப்பும் கணிசமானதாக இருந்தது. 1922 ஆம் ஆண்டு இந்தியாவில் இயற்றப்பட்ட தொழிலாளர் வெளியேற்றச் சட்டம் இந்தியாவில் இருந்து பெருந் தோட்டங்களுக்கு ஆள் திரட்டுவதைத் தடை செய்தது. 1920 ஆம் ஆண்டுச் சட்டப்படி தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்வி அளிப்பது கட்டாயமாக்க பட்டது. பெருந்தோட்டத்தில் 1904 இல் 2000 பிள்ளைகள் மாத்திரமே பாடசாலைகளில் இருந்தார்கள். இது 1920 இல் 11,000 ஆகவும், 1930 இல் 26,000 ஆகவும் அதிகரித்தது. 1920 ஆம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி பெருந்தோட்டத்தில் உள்ள ஆண்களில் 27.6% , பெண்களில் 7.1% கல்வியறிவுடையோராக இருந்தனர். சராசரி வீதம் 18% ஆகும். 1911 இல் இச் சராசரி 12% ஆக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அதிகரித்த கல்வி அறிவு வீதம் கங்காணிமாரின் ஏமாற்று வேலைகளை அறியச் செய்தது. 1908 இல் கங்காணியிடம் உள்ள தமது கடன் பற்றி தொழிலாளர்கள் அறிந்திருந்தனர் எனத் தொழில் ஆணைக்குழு எடுத்துக் காட்டியது. அதிகரித்த கல்வி வசதி தொழிலாளர்கள் பத்திரிகையைப் படிக்க வசதி செய்தது. இதனால் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்கள் பற்றிய அறிவைப் பறெ முடிந்ததுடன் கங்காணிமாரை எதிர்க்கும் பலத்தையும் அதிகரித்தது. கல்விகற்றதன் காரணமாக இந்தியால் வெளியாகிய தமிழ் நாளேடுகளையும் படிக்க முடிந்தமையினால் அங்குள்ள அரசியல் நிலமைகளையும் தொழிலாளர்கள் அறிய முடிந்தது.

1927 இல் காந்தியும், 1931 இல் நேருவும், இலங்கைக்கு வந்தமையும் தூண்டுதலைக் கொடுத்தது. 1931 இல் தொழிலாளர்களுக்குக் கிடைத்த வாக்குரிமையும் அரசியல்

உணர்வை ஏற்படுத்தியது. இதற்கு முன்னர் வாக்குரிமையானது வருமானம், சொத்து, கல்வித் தகமை போன்றவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததால் தோட்டத் தொழிலாளர்கள் எவ்வித அரசியல் உரிமையையும் கொண்டிருக்கவில்லை. ஆனால் 1931 இல் டொனமூர் ஆணைக்குழுவின் சிபார்சின் படி ஏறக்குறைய 100,000 இந்தியர்கள் வாக்குரிமையைப் பெற்றனர். இதனால் தோட்டப் பகுதிகளில் பெருங் கூட்டங்கள் நடந்தன. துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. அத்துடன் தேர்தலில் போது இரு இந்தியர்கள் சட்ட சபைக்குத் தெரிவு செய்யப்பட்டனர். தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கிடைத்தவுடன் தொழிற் சங்கங்களும், தலைவர்களும் இவர்கள் விடயத்தில் அக்கறை காட்டத் தொடங்கினர். 1914-1918 இற்கும் இடையில் இந்திய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. அத்துடன் 1925-1930 இற்கும் இடையில் மத்திய மாகாணம், ஊவா மாகாணம் போன்றவற்றில் வட இந்திய சங்கம், அகில இலங்கை இந்திய இளைஞர் சங்கம் போன்றவை ஆரம்பிக்கப்பட்டன. இவை பெரும்பாலும் அரசியல் கலப்புள்ளவையாகவும், மத்திய வகுப்பைச் சாராதவையாகவும், இந்தியத் தோட்டத் தொழிலாளர் பற்றி அக்கறை கொள்ளாதவையாகவும் இருந்தன. இக்காலத்தில் தொழிலாளர்கள் இடையே மகாத்மாகாந்தி, சுபாஸ் சந்திரபோஸ் போன்றோர்களின் பெயர்களின் அடிப்படையில் சங்கங்கள் உருவாகிய போதும் அவை தொழிற் சங்கங்களை உருவாக்குவதற்கான அடிப்படையை ஏற்படுத்துவதில் தவறி விட்டன.

1931 இல் இலங்கையில் பெருமளவு வேலையின்மை, பொருளாதாரத் தேக்கம் போன்ற காரணங்காளால் இந்திய எதிர்ப்புணர்வு நகரத் தொழிலாளர் வகுப்பினரிடையே மேலோங்கி இருந்ததால் தோட்டத் துறை சார்ந்த தொழிலாளர் இயக்கம் வேறொரு வகையில் வளர வேண்டியிருந்தது. 1931 இல் நடேசையர் அவர்களால் அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சம்மேளனம் ஆரம்பிக்கப்பட்டதுடன். தொழிற்சங்க இயக்கம் ஆரம்பமானது எனலாம். பொருளாதாரத் தேக்கம்,

வேலையின்மை, குறைந்த பட்சக் கூலியில் குறைப்புப் போன்றன இதன் வளர்ச்சியைத் தடை செய்தன. தொழிற் சங்கவாதிகள் தோட்டத்திற்குள் நுழைவதும் சட்ட விரோதமாக இருந்தது. இந்நிலையில் சங்கத்தின் நடவடிக்கைகள் இரு வழிகளுக்கு மாத்திரம் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

* தொழிலாளர்களின் குறைகளைப் பெட்டிம் மூலம் அறிவித்தல்: சம்மேளனம் இம்முறையினைக் கடைப்பிடித்த போது பெட்டிங்களின் தொகை (பெருந்தோட்ட சுப்பிரீண்டன், இலங்கையில் இருந்த இந்திய அரசப் பிரதிநிதி ஆகியோருக்கு அனுப்பப்பட்டவை) அதிகரித்தது. இவ்வகையில் அனுப்பபட்ட பெட்டிங்களின் எண்ணிக்கை முறையே 1929 இல் 956, 1931 இல் 1859 எனவும் 1933 இல் 2468 ஆகவும் காணப்பட்டன.

* கூட்டங்கள், துண்டுப் பிரசுரங்கள், வெளியீடுகள் மூலம் பிரசாரம் செய்தல்: தொழிற்சங்கவாதிகள் பெருந்தோட்ட த்திற்குள் நுழைவது சட்டபடி குற்றமாக இருந்ததால் அருகில் இருந்த நகரங்களில் கூட்டங்கள் நடந்தன. 1931 இல் யூனில் கண்டியில் நடந்த தொழிற் சங்கக் கூட்டத்தில் நடேசையர் தொழிலாளர்கள் தமது குறைகளைச் சங்கத்தின் ஊடாக வெளிப்படுத்துமாறு கூறினார். அதிக பணம் படைத்த தோட்ட முதலாளிகள் வறிய மக்களான தோட்டத்தொழிலாளர்கள் சங்கம் அமைக்க முற்பட்டதை பலவழிகளிலும் நசுக்க முயன்றனர். அவர்களின் முதல் நடவடிக்கையாகத் தொழிற்சங்கத்தில் இருந்துவரும் கடிதங்களுக்கு பதில் போடக்கூடாதென சுப்பிரின்டன் களுக்குக் கூறப்பட்டது. மேலும் தொழிற்சங்கத்தி லிருந்துவரும் பெட்டி'ன்களைக் கவனிக்காமல் விடுமாறு தோட்டமுதலாளிகள் அப்போது இந்தியப் பிரதிநிதியாக இருந்த கே.பி.எஸ்.மேனன் என்பவரைக் கேட்டனர். அதற்கு அவர் மறுத்து விட்டார். மேலும் நடேசையருக்கு எதிராக துண்டுப் பிரசுரங்களையும் வெளியிட்டனர். மேலும்

தோட்டத்துரைமார் தமது கருத்துக்களை தோட்ட உத்தியோகத்தர் சங்கத்திலும் வெளிப்படுத்தி நடேசையருடன் தொடர்பு கொள்ளக்கூடாதெனக் கூறினர். இத்தகைய காரணங்களாலும், பொருளாதாரத் தேக்கம் தேயிலை, இறப்பர் தொழிலைப் பாதித்ததாலும் 1932 ல் தொழிற் சங்கத்தினுள் உள்வாரியாக வி.பி. நாதனுக்கும் நடேசையருக்கும் ஏற்பட்ட பிணக்காலும் தொழிற்சங்கம் பலமான முறையில் வளர முடியவில்லை.

1935 இல் தொழிற் சட்ட மூலம் அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்ட பின்னரும் தோட்டப் பகுதிகளில் தொழிற் சங்கங்கள் அமைக்கப்படுவதைப் பெரும்பாலான தோட்டத் துரைமார்கள் வேறு முறையில் நசுக்கி வந்தனர். இச் சட்டத்தின் கீழ் லங்கா சம சமாஜக் கட்சி தமது அகில இலங்கைத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தினை பதிவு செய்தது. நடேசைய்யர் தோட்டப் பகுதியில் தொழிற் சங்கத்தை முதலில் ஸ்தாபித்த போதும் சம சமாஜா வாதிகள் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்கிய பின்னரேயே தோட்டப் புறங்களில் வேலை நிறுத்தங்களும், போராட்டங்களும் உத்வேகம் பெற்றன.

தொழிற்சங்கச் சட்டம் *(Trade Union Ordinance)* என்பது 1935 இல் தான் இலங்கையில் அமுலுக்கு வந்தது. இருப்பினும் தோட்டங்களில் தொழிற்சங்கங்களை அனுமதிக்க துரைமார் அப்போது தயாராக இருக்காததுடன் அதற்கு மாறாகத் தொழிற்சங்கங்களை முளையிலேயே கிள்ளி எறிய அவர்கள் முயன்றனர். *(C.V. Velupillai, 1981 : P : iii)* என்பதும் குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, 1939 இல் பொகவந்தலாவையில் கொட்டியாகலை தோட்டத்தொழிலாளர்கள் தொழிற்சங்கம் அமைக்க அனுமதி கோரிய போது அது அநாவசியமானது, தொழிலாளரது கட்டுப்பாட்டைச் சிதைத்து விடும் என்று கூறி தோட்டத்துரை அக்கோரிக்கையை நிராகரித்தார். பின்னர் தொழிலாளர்கள் வேலைநிறுத்த நடவடிக்கைகளில் ஈடுபட்டே தொழிற்சங்கம் அமைக்கும்

உரிமையைப் பெற்றுக் கொண்டனர்

சம சமாஜா வாதிகள் 1940 இல் பதுளையில் மே தினத்தை வெகு விமர்சையாகக் கொண்டாடினர். இவ்வாறு மலையகத்தில் அரசியல் விழிப்புணர்வையும், வர்க்க உணர்வையும் வளர்க்கும் ஆரம்ப முயற்சி இவர்களாலேயே மேற்கொள்ளப்பட்டது. இவர்களுடன் நடேசையர் மிக நெருக்கமாக ஒத்துழைத்தார். இவ்வாறு மலையகப் பகுதிகளில் இடது சாரிகள் வேரூன்றத் தொடங்கிய காலப் பகுதியில் தான் இரண்டாம் உலக யுத்தம் வெடித்தது. யுத்தத்தின் போது பிரித்தானியருக்கு ஒத்துழைப்பு நல்க மறுத்து ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்தினைத் தீவிரப் படுத்திய சம சமாஜக் கட்சித் தலைவர்கள் 1940 யூனில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டனர். எனினும் 1942 மார்ச்சில் இவர்களது தொழிற் சங்கம் சட்ட விரோதமாக்கப்படும் வரை இயங்கியது. வளரத் தொடங்கிய போதே தடை செய்யப்பட்டதால் இவர்களது தொழிற் சங்கம் வளர முடியாது போயிற்று.

1939 இல் இந்தியத் தொழிலாளர்கள் ஏற்றுமதியைத் தடை செய்த பின்பு துரைமாரால் தொழிலாளர்களைத் தொழிற் சங்கம் அமைத்த குற்றத்திற்காக இந்தியாவிற்குத் திரும்ப அனுப்ப முடியவில்லை. இதைவிட 1940 யூலை 29 இல் தோட்டத் துரைமார்களுக்கும், தொழிற் சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையே இடம்பெற்ற 7 அம்ச ஒப்பந்தத்தினைத் தொடர்ந்து இச் சங்கம் வேகமாக வளரத் தொடங்கியது. பின்னர் 1950 இல் எஸ். தொண்டமான் தலைமையில் இச்சங்கம் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் எனப் பெயர் மாற்றம் பெற்று இன்றும் பெரிய தொழிற் சங்கமாகத் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்க ஓர் அம்சமாகும்.

## உசாத்துணைகள் :

1. Visakha Kumari Jayawardena (1972), "The Rise of the Labour Movement in Ceylon", Durham NC Duke University Press .

2. Colvin R. De. Silva, (1962), "Ceylon Under the British Occupation", The Colombo Apothecaries Co. Ltd. Ceylon.

3. Sivaram, B . and D.P,B Herath, (1996), Lobour Economics in Tea, Tea Research Institute of Sri Lanka.

4. சாரல் நாடன், (2008), தேசபக்தன் கோ. நடேசய்யர் - ஒரு வரலாற்று ஆய்வு, குமரன் புத்தக அச்சகம், கொழும்பு., இலங்கை.

5. மூக்கையா, மா. சே.,(1995), இன்றைய மலையகம் (கட்டுரைத் தொகுப்பு).

6. De Silva, K. M. (2008), A History of Sri Lanka, Vijthayapa Pablications, Sri Lanka.

7. Velupillai, C. V. (1970), " Born to Labour", Printed by M.D Gunasena & Co Ltd.

8. நித்தியானந்தன்,வி., (1989), "இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியிற் கோல்புறாக் சீர்திருத்தங்கள்", பொருளிய லாளன், யாழ்ப்பாணம், மலர் -3,

9. வேலுப்பிளை, சீ, வீ, (1981), 'வீடற்றவன்', வெளியீடு வைகறை, ஒக்டோபர் 1981.

10. வேலுப்பிள்ளை, சீ.வீ,, (1984), 'இனிப்பாடமாட்டேன்', இனிப் பாடமாட்டேன். (இலங்கை இந்திய வம்சாவளித் தமிழர்களின் அவலநிலை பற்றிய புதினம்), சென்னை, இந்தியா சேமமடு புத்தக நிலையம், ஜனவரி 1984.